**மாகாணக் கல்வித் திணைக்களம்**
**வடக்கு மாகாணம்**
**சுய கற்றல் கையேடு - 2020**
**கர்நாடக சங்கீதம்**

**தரம் 6**

முதலாம் தவணை

## சூழலில் கேட்கப்படும் இசை

சூழலில் நாம் பல்வேறு விதமான ஒலிகளை கேட்கின்றோம். அவற்றை இனிமையான ஒலிகள் எனவும் இனிமையற்ற ஒலிகள் எனவும் பிரித்து நோக்குவோம்.

- இனிமையான ஒலிகள் இசை எனப்படும். அவை இரசிக்கக் கூடியவை.
  உதாரணம் - பறவைகளின்ஒலி, பாடல்கள், கோயில் மணியோசை,
  இசைக் கருவிகளின் ஒலி

- இனிமையற்ற ஒலிகள் இரைச்சல் எனப்படும். அவை இரசிக்க முடியாதவை.
  உதாரணம் - வாகனச்சத்தம், மாணவர் இரைச்சல், தொழிற்சாலைகளின் சத்தம்.

மேலும் ஓசைகளின் அடிப்படையில் இருபிரிவுகளாக வகுக்கலாம்.

- நீண்ட ஓசையுடைய ஒலிகள்
  உதாரணம் - குயில் கத்தும் ஓசை, புகையிரதத்தின்ஓசை, மணியோசை.

- குறுகிய ஓசையுடைய ஒலிகள்
  உதாரணம் - காகம் கத்தும் ஒலி, கிளி கத்தும் ஒலி, கை தட்டும் ஒலி.

ஒலி கேட்கும் தூரத்தின் அடிப்படையிலும் இரு பிரிவுகளாக வகுக்கலாம்.

- நீண்ட தூரம் கேட்கும் ஒலிகள்
  உதாரணம் - நாதஸ்வரத்தின் ஓசை, வாகனங்களின் ஒலி, பறவைகளின் ஒலி, மணியோசை.

- குறுகிய தூரம் கேட்கும் ஒலிகள்
  உதாரணம் - கதைக்கும் ஒலி, இருமும் ஒலி, கை தட்டும் ஒலி.

## புத்தளிப்புக்கருவி

சூழலில் கிடைக்கக் கூடிய பொருட்களைக் கொண்டு எளிதான முறையில் அமைக்கப்படும் இசைக்குருவிகளின் மாதிரி உருக்களே புத்தளிப்புக் கருவிகளாகும். இவை தாள வாத்தியமாகவும் இசைக்கருவிகளாகவும் இருக்கலாம்.

சிரட்டை, சோடா மூடி, தகரம், ஆணி, பித்தளை தகடுகள், கம்பி, புளியங்கொட்டை, மூங்கில் தடி. மரப்பலகை. நூல் போன்ற பொருட்கள் புத்தளிப்புக்கருவிகளாக்க பயன்படுத்தப்படுகின்றன.

## சங்கீதம்

இக்கலையானது உயிரினங்கள் அனைத்தையும் பரவசப்படுத்தி ஒருநிலைப்படுத்தக்கூடியது. சங்கீதம் என்பது காதினால் கேட்டு மனதினால் உணரக்கூடிய நுட்பமான கலையாகும். இது லலித கலைகளில் மேன்மையானதாகும். இவ் இசைக்கலையினை சிரவணக்கலையென சிறப்பாக அழைப்பர்.

தெய்வீகத்தன்மை வாய்ந்தது என்பதற்கு சான்றாக கண்ணன் கையில் குழலும், சரஸ்வதி கையில் வீணையும், சிவனின் கையில் உடுக்கும் நந்தியின் கையில் மத்தளமும் காணப்படுவதை குறிப்பிடலாம்.

ஆரம்ப காலத்தில் கீதம், நிருத்தியம், வாத்தியம் மூன்றும் இணைந்ததே சங்கீதம் என அழைக்கப்பட்டது. நிருத்தியம் பிற்காலத்தில் தனிக்கலையாக வளர்ச்சியடைந்தது. தற்காலத்தில் கீதம், வாத்தியம் இரண்டுமே சங்கீதம் என அழைக்கப்படுகிறது. சங்கீதத்திற்கு காந்தர்வ வேதம் என்ற மறு பெயரும் உண்டு.

சங்கீதம் கற்பதனால் அன்பு, அடக்கம், பக்தி, நிதானம், அமைதி, நட்பு, ஒத்திசைவு, விட்டுக்கொடுப்பு, பெரியோரை மதித்தல் போன்ற நற்பண்புகள் விருத்தியடைகின்றன.

மனிதனின் பிறப்பு முதல் இறப்பு வரையான ஒவ்வொரு கட்டங்களிலும் இசை தொடர்புற்றுள்ளதை காணலாம். உதாரணமாக நலங்குப்பாடல், தாலாட்டுப்பாடல், தொழிற்பாடல், ஒப்பாரிப்பாடல் விளையாட்டுப்பாடல் போன்றவற்றை குறிப்பிடலாம்.

## நாதம்

செவிக்கு இனிமையை கொடுக்கும் ஒலி நாதம் எனப்படும். இதனை ஒழுங்கு படுத்தப்பட்ட ஒலிகளின் கோலம் என்பர். நாதம் சங்கீதத்திற்கு ஆதாரமாக அமைந்துள்ளது.

நாதத்திலிருந்து சுருதியும் சுருதியிலிருந்து ஸ்வரங்களும் ஸ்வரங்களிலிருந்து இராகங்களும் தோன்றுகின்றன. ஒழுங்குபடுத்தப்படாத ஒலிகளின் கோலத்தினை இரைச்சல் என அழைப்பர்.

நாதம் இரண்டு வகைப்படும்.

1. ஆகதநாதம்
2. அநாகத நாதம்

## ஆகதநாதம்

மனித முயற்சியினால் உருவாக்கப்படும் நாதம் ஆகத நாதம் எனப்படும். இதனை செயற்கை நாதம் என அழைப்பர். இதனை சாதாரண மனிதர்களாலும் உணர முடியும்.

உதாரணம் - நாம் கேட்கும் பாடல்கள், வாத்திய இசைகள்.

## அநாகத நாதம்

மனிதனது முயற்சி இன்றி இயற்கையாக உண்டாக்கப்படும் நாதம் அநாகத நாதம் எனப்படும். இதனை இயற்கை நாதம் என அழைப்பர். இதனை யோகிகள் முனிவர்கள் மட்டும் உணர முடியும். ஸ்ரீதியாகராஜசுவாமிகள் சிறந்த நாத யோகி ஆவார்.

## சுருதி (ஸ்ருதி)

நாம் பாடுவதற்கும் வாத்தியங்கள் இசைப்பதற்கும் ஆதாரமாக உள்ள ஒலி சுருதி எனப்படும். சுருதியை தமிழிசையில் கேள்வி என அழைப்பர். சுருதிக்குரிய மறு பெயர் கேள்வி, அலகு என்பனவாகும். சுருதியை மாதாவிற்கு ஒப்பிட்டு கூறுகின்றனர். சுருதி மாதா பிதா லயம் எனக்கூறுவதுண்டு. சுருதிக்காக பயன்படுத்துபவை தம்புரா, சுருதிப்பெட்டி, எலக்ரோனிக் தம்புரா எலக்ரோனிக் சுருதி ஹார்மோனியம் என்பனவாகும்.

சுருதி இரண்டு வகைப்படும்.

1. பஞ்சம சுருதி
2. மத்திம சுருதி

## பஞ்சம சுருதி

- (ஸ, ப, ஸ்)என்னும் ஸ்வரங்களில் மத்தியஸ்தாயி ஸட்ஜத்தை ஆதாரஸட்ஜமாக வைத்துக்கொண்டு பாடுவது பஞ்சம சுருதி எனப்படும்.

## மத்திம சுருதி

- (ஸ ம ஸ்) என்னும் ஸ்வரங்களில் மத்தியஸ்தாயி மத்திமத்தை ஆதாரஸட்ஜமாகக் கொண்டு பாடுவது மத்திம சுருதி எனப்படும்.

# தைப்பொங்கல்

- தைப்பொங்கல் விழாவானது தமிழர்களது திருநாளாகும்
- இது தை மாதம் முதலாம் திகதி (தமிழுக்கு) கொண்டாடப்படுகின்றது.
- சூரியனுக்கு உழவர்களால் நன்றி செலுத்தும் முகமாக இப் பண்டிகை கொண்டாடப்படுகிறது.
- இதனால் இப் பண்டிகையை உழவர் திருநாள் என அழைக்கப்படுகிறது.
- பொங்கல் விழாவின் பிரதான நிகழ்வுகள்.
    - முற்றத்தில் மெழுகி கோலமிடுதல்
    - நிறை குடம் வைத்து தோரணம் கட்டுதல்
    - பொங்கல் பானையை அலங்கரித்தல்
    - பொங்கல் பொங்குதல்
    - சூரியன் உதயமாகும் போது பொங்கலை படைத்தல்
    - தூபதீபம் காட்டி இறைவணக்கம் செய்தல்.
    - அனைவரும் பகிர்ந்துண்ணல்.

# சித்திரை வருடப்பிறப்பு

- புதுவருடப்பிறப்பு இந்துக்களாலும் பௌத்தர்களாலும் கொண்டாடப்படும் பண்டிகையாகும்.
- இது சித்திரை முதலாம் திகதி (தமிழுக்கு) வருடம் தோறும் கொண்டாடப்படுகிறது.
- புத்தாடை அணிந்து ஆலயங்களுக்கு சென்று வழிபடுவர்
- புதுவருடப்பிறப்பின் முக்கிய நிகழ்வுகள்
    - மருத்து நீர் வைத்து நீராடுதல்.
    - புத்தாடை அணிதல்.
    - ஆசீர்வாதம் பெறுதல்.
    - கைவிசேடம் பெறுதல்.
    - குடும்ப உறவினர்களுடன் உணவுவகைகளை பகிர்ந்துண்ணல்.
    - கிராமத்து விளையாட்டுக்களில் ஈடுபடல்.

இரண்டாம் தவணை

# இசை வாழ்க்கையோடு தொடர்புடைய

## (குழந்தைப் பருவப் பாடல்)

- மனித வாழ்க்கையில் இசையானது பிறப்பு முதல் பின்னிபிணைந்துள்ளது.

- ஒரு குழந்தை பிறந்தவுடன் வாழ்த்திப்பாடப்படும் பாடல் மருத்துவிச்சிப்பாடலாகும்.
  உதாரணம் அரிசிப் பொரியோடும் வந்தீரோ தம்பி……

- குழந்தையை தூங்க வைப்பதற்காகப்பாடப்படும் பாடல் தாலாட்டுப்பாடலாகும்.
  உதாரணம் ஆராரோ ஆரிரரோ…..

- பிள்ளைகள் சேர்ந்து விளையாடும் போது பாடப்படும் பாடல்கள் விளையாட்டுபடபாடலாகும்.
  உதாரணம் குலை குலையாய் முந்திரிக்காய்…

- இவ்வாறான பாடல்கள் குழந்தைப்பருவத்தில் அவர்களின் மொழிவிருத்திக்காகவும் உளவிருத்திக்காகவும் எளிய மொழிநடைகளிலும் இலகுவான இசையமைப்பிலும் அமைந்துள்ளதை காணமுடிகின்றது. இப்பாடல்கள் செவிவழியாகவே பேணப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## பாடசாலைக்கீதம்

- பாடசாலைக்கீதத்தில் பாடசாலை வரலாறு, வாழ்த்து, சிறப்பு போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும்.
- பாடசாலைக்கீதத்தின் இசை மிகவும் கவர்ச்சி கரமானதாகவும் மனதிற்கு இனிமையை தருவதாகவும் அமைந்திருக்கும்.
- இதன் தாளம் விறுவிறுப்பான நடையில் அமைந்திருக்கும்.
- புாடசாலையின் காலை ஆராதனை, கலை விழா, பரிசளிப்பு விழா, இல்ல விளையாட்டுப்போட்டி போன்றவற்றில் இசைக்கப்படும்.
- பாடசாலைக்கொடி ஏற்றியவுடன் இப்பாடல் பாடப்படும்.
- பாடசாலைக்கீதம் பாடும் போது நேராக நிமிர்ந்து நின்று மதிப்பளித்து மரியாதை செய்தல் வேண்டும்.
- ஒரு பாடசாலை அமைந்துள்ள சமூகத்தின் கலை கலாச்சார, பண்பாட்டு விழுமியங்களை தேசிய ரீதியில் எடுத்துக்கூறும் சான்றாக பாடசாலைக்கீதம் திகழ்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# ஸ்வரம்

- இயற்கையாகவே இனிமையான ஓசையையுடைய எழுத்துக்கள் ஸ்வரங்கள் என அழைக்கப்படும்.
- அதனால் ரஞ்சனையை கொடுக்கும் த்வனி என அழைப்பர்.
- இதனை தமிழிசையில் கோவை என அழைப்பர்.
- சங்கீதத்திற்கு ஆதாரமாக ஏழு ஸ்வரங்கள் காணப்படகின்றன.
- இவற்றை ஸப்த ஸ்வரங்கள் என அழைப்பர்.
- ஸபத ஸ்வரங்களும் அவற்றின் வடமொழிப் பெயர்களும் தமிழிசைப்பெயர்களும் வருமாறு.

| ஸப்த ஸ்வரங்கள் | வடமொழிப்பெயர் | தமிழிசைப்பெயர் |
|---|---|---|
| ஸ | ஸட்ஜம் | குரல் |
| ரி | ரிஷபம் | துத்தம் |
| க | காந்தாரம் | கைக்கிளை |
| ம | மத்திமம் | உழை |
| ப | பஞ்சமம் | இளி |
| த | தைவதம் | விளரி |
| நி | நிஷாதம் | தாரம் |

# ஆரோகணம்

ஸ்வரங்கள் சுருதியில் படிப்படியாக உயர்ந்து ஒலித்தல் ஆரோகணம் எனப்படும்.
ஆரோகணத்தை தமிழிசையில் ஆரோசை என அழைப்பர்.
ஆரோகணத்திற்கு ஏற்றம், ஆரோகி ஆகிய மறு பெயர்களும் உண்டு
ஊதாரணம் ஸரிகமபதநிஸ்.
ஆரோகண வரைபடம்.



## அவரோகணம்

- ஸ்வரங்கள் சுருதியில் படிப்படியாக குறைந்து ஒலித்தல் அவரோகணம் எனப்படும்.
- அவரோகணத்தை தமிழிசையில் அமரோசை என அழைப்பர்.
- அவரோகணத்திற்கு இறக்கம், அவரோகி ஆகிய மறு பெயர்களும் உண்டு.
  உதாரணம் ஸ்நிதபமகரிஸ
- அவரோகண வரைபடம்.




## வெசாக் பண்டிகை

- வெசாக் பண்டிகையானது பௌத்த மதத்தவர்களால் கொண்டாடப்படுகிறது.
- புத்தரின் பிறப்பு பரிநிர்வாணம் இறப்பு ஆகியவற்றை குறிக்கும் தினமாகும்.
- வெசாக் பண்டிகையின் முக்கிய நிகழ்வுகளாவன.
  - வெசாக் பந்தல்கள் அமைத்தல்.
  - வெசாக் கூடு கட்டி தொங்கவிடுதல.
  - வெசாக் விளக்குகள் அமைத்தல்.
  - பக்திகீதங்கள் இசைத்தல்.
  - தாகசாந்தி நிலையங்கள் அமைத்தல்.
  - அன்னதானம் வழங்குதல்.

## ரம்ழான் பண்டிகை

- ரம்ழான் பண்டிகையானது இஸ்லாமிய மதத்தவர்களால் கொண்டாடப்படும் விஷேட பண்டிகையாகும்.
- இஸ்லாமிய கலண்டரின் படி ஒன்பதாம் மாதம் முதல் பிறை கண்டு 28 29 30 நாட்கள் நோன்பிருந்து புதுப் பிறை காணப்படும் தினம் ரம்ழான் ஆகும்.
- ரம்ழான் பண்டிகையின் முக்கிய நிகழ்வுகளாக
  - நோன்பு நோற்றல்
  - நோன்பு தொடர்பான சம்பிரதாய தர்மங்களைக்கடைபிடித்தல்.
  - விசேட தொழுகை.
  - சமய ஆராதனைகள்
  - புதுப் பிறைகாணல்.
  - பகிர்ந்துண்ணல் போன்றனவாகும்.

### மூன்றாம் தவணை

# வாழ்க்கையோடு தொடர்புடைய இசை

## (வளர்தோர் பருவப்பாடல்)

- மனித வாழ்க்கையில் இசையானது பிறப்பு முதல் இறப்பு வரை பின்னிபிணைந்துள்ளது.
- குழந்தை பருவ பாடல்களில் தாலாட்டு விளையாட்டு பாடல்களை கற்றோம.
- குட்டிளமை பருவத்தில காதல் வீரம் நிறைந்த பாடல்களை பாடுவார்கள்.
- தொழில் செய்யும் போது களைப்பு தெரியாமல் இருப்பதற்காக பாடப்படும் பாடல் தொழில் பாடல் ஆகும்.
- திருமணச்சடங்குகளில் பாடப்படும் பாடல் நலங்குப்பாடல்.
- ஊஞ்சல் ஆடப்படும் போது பாடப்படும் பாடல் ஊஞசற்பாடல்.
- ஒருவர் இறந்தவுடன் பாடப்படும் பாடல் ஒப்பாரிப்பாடல்.
- இப்பாடல்களின் இசையானது பாடப்படும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான முறையில் அமைந்திருக்கும்.
- இவற்றின் கருத்தானது பாடப்படும் சந்தர்ப்பங்களை விளக்கும் வகையில் அமைந்திருக்கும்.
- இப்பாடல்களின் சொற்பிரயோகமானது மிகவும் எளிமையானதாக இருக்கும்.
- இவற்றின் தாளமானது பாடப்படும் சந்தர்ப்பங்களுக்கு அமைவாக இருக்கும்.

.

## தாளம்

- அட்சர எண்ணிக்கைக்கேற்ப காலஅளவு மாறுபடாமல் கையினாலோ அல்லது கருவியினாலோ தட்டுதல் தாளம் எனப்படும்
- பாட்டை சீராக பாட உதவுவது தாளமாகும்.
- தாளத்தினை கையினால் போடுவதற்கு அங்கங்கள் பயன்படுத்தப்படுகின்றன.
- தற்காலத்தில் தாளத்தின் முதல் மூன்று அங்கங்களும் பயன்படுத்தப்படுகின்றது
- இவை திரியாங்கங்கள் என அழைக்கப்படுகினறது.
- அவையாவன

| | | |
|---|---|---|
| 1 லகு – | I | தட்டி விரல் எண்ணுதல் |
| 2 த்ருதம் - | O | தட்டி வீசுதல் |
| 3 அனுத்ருதம் - | U | ஒரு முறை தட்டுதல் மட்டும் |

ஆதி தாளத்தை எடுத்துகொண்டால் தட்டி மூன்று விரல் எண்ணி, தட்டி வீச்சு, தட்டி வீச்சினையும் கொண்டது. இதன் அஷ்சர எண்ணிக்கை 8 ஆகும். குறியீடு $I_4$O O

## திஸ்ர நடை

தாளத்தின் ஒரு அட்சரத்திற்கு மூன்று எண்ணிக்கையை குறித்து நிற்பது திஸ்ர நடையாகும். இதன் சொற்கட்டு தகிட என்பதாகும்.

## சதுஸ்ர நடை

தாளத்தின் ஒரு அட்சரத்திற்கு நான்கு எண்ணிக்கையை குறித்து நிற்பது சதுஸ்ர நடையாகும். இதன் சொற்கட்டு தகதிமி என்பதாகும்

## நத்தார் பண்டிகை

.

- நத்தார் பண்டிகையானது கிறிஸ்தவ மதத்தவர்களால் கொண்டாடப்படுகிறது
- இது ஒவ்வொரு வருடமும் மார்கழி மாதம் 25 ஆம் திகதியன்று கொண்டாடப்படுகின்றது.
- அன்றைய நாள் யேசுபாலனின் பிறப்பு நாளாகும்.
- நத்தார் பண்டிகை காலத்தில் கிறிஸ்து பிறப்பின் பாடல்களை பாடுவார்கள்.
- இப் பாடல்கள் கரோல் கீதம் என அழைக்கப்படும்.
- நத்தார பண்டிகையின பிரதான நிகழ்வுகளாக.
    - வாழ்து மடல்கள் அனுப்புதல்
    - நத்தார் அலங்காரம்
    - நத்தார் மரம் அலங்கரித்தல்.
    - நத்தார் தாத்தா.
    - தேவாலயத்திற்கு செல்லல்.
    - கரோல் கீதமங்களை பாடுதல்
    - உறவினர் சுற்றத்தாருடன் பகிரந்துண்ணல்..

.

தயாரிப்பு:- திரு.கு.கோகுலன்,
சேவைக்கால ஆசிரிய ஆலூாசகர்,
வலயக்கல்வி அலுவலகம்,
கிளிசொச்சி

# செயன் முறை

## தரம் 6

| இல | பாடல் வரி | வகை | இராகம் | தாளம் | இயற்றியவர் |
|---|---|---|---|---|---|
| 1 | இசை பயில்போம் | சிறுவர் பாடல் | சங்கராபரணம் | ஆதி | பொன் ஸ்ரீ வாமதேவன் |
| 2 | ஸ்ரீ லங்கா தாயே | இலங்கைத் தேசிய கீதம் | ஹமீர் கல்யாணி | ஏகம் | ஆனந்த சமரக்கோன் |
| 3 | மண்ணை நம்பி | அரிவு வெட்டுப் பாடல் | ------------- | ஆதி (திஸ்ரநடை) | ------------- |
| 4 | கண்ணன் புரிந்த லீலை | சிறுவர் பாடல் | காபி | ஏகம் (திஸ்ரநடை) | பிரம்மஸ்ரீ ந.வீரமணி ஐயர் |
| 5 | தோடுடைய செவியன் | தேவாரம் | கம்பீரநாட்டை | ரூபகம் | திருஞானசம்பந்தர் |
| 6 | ஸரிகம பதநிஸ் | ஸ்வர வரிசைகள் | மாயாமாளவகௌளை | ஆதி | ஸ்ரீ புரந்தரதாசர் |
| 7 | அன்பு நிறைந்த பாட்டி | சிறுவர் பாடல் | தேஷ் | ஆதி | திருமதி.கோகிலா மகேந்திரன் |
| 8 | வாழ்க நிரந்தரம் | தமிழ் மொழி வாழ்த்து | மாண்டு | ஆதி | சுப்பிரமணிய பாரதியார் |
| 9 | லக்கை லாலாக்கை | மாவு இடித்தற் பாடல் | வலஜி | ஆதி | சுச.சிவஞானராஜா |

- "தோடுடைய செவியன்" என்ற தேவாரத்தின்
  பண்:- நட்டபாடை
  தலம்:- திருப்பரம்மபுரம்